**கரூர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின்**
**செயல்முறைகள் முன்னிலை:திரு.எ.சிவராமகிருஷ்ணராஜ்,பி,ஏ.,**

பவ4/ 5523/ 2023 நாள். 26.12.2023

| | | |
|---|---|---|
| பொருள்:- | | **பணியமைப்பு**-கரூர் மாவட்டம்-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு-தமிழ்நாடு அமைச்சுப்பணி -தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IV ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்/காசாளருக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது- பணிவரன்முறை செய்து -ஆணையிடுதல். |
| பார்வை:- | 1) | செயலாளர்,தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை அவர்களின் கடிதம் எண்.1850/பி.எஸ்.டி-டி1/2023,நாள்.18.08.2023. |
| | 2) | கரூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் எண்.ந.கபவ4/5523/2023, நாள்.07.09.2023. |

•••••

**ஆணை:-**

பார்வை-1 இல் காணும்,தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தமிழ்நாடு அமைச்சப் பணி விதிகளின் கீழ் தொகுதி-IV ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு மேற்படி செயல்முறையில் பணியமர்வு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்/காசாளர் நிலையில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.பார்வை-2 இல் காணும்,செயல்முறைகளின்படி,கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தற்காலிகமாக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்க்காணும் இளநிலை உதவியாளர்/காசாளர் பணியாளர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்களுக்கெதிரே கலம்(5) இல் கண்டுள்ள நாளில் பணியினை வரன்முறை செய்தும்,அன்றைய நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை துவக்கியும்,இதன் வழி ஆணையிடப்படுகிறது.

| **வரிசை எண்** | **பணியாளரின் பெயர்** | **தற்பொழுது பணிபுரியும் பதவி/அலுவலகம்** | **இளநிலை உதவியாளர்/ காசாளராக பணியில் சேர்ந்த நாள்** | **இளநிலை உதவியாளர்/ காசாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள்** |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1) | பா.செல்வம் | காசாளர், ஊராட்சி ஒன்றியம், கடவூர். | 09.09.2023 மு.ப | 09.09.2023 மு.ப |
| 2) | த.குணசேகரன் | இளநிலை உதவியாளர், மாவட்ட ஆட்சியரக(வளர்ச்சி) பிரிவு, கரூர். | 13.09.2023 மு.ப | 13.09.2023 மு.ப |

**நிபந்தனைகள்**

(1) இவ்வாணையானது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IV ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பணிநாடுநர்கள் தெரிவு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புகளுக்குட்பட்டதாகும்.

"The regularization is subject to the outcome of the WPs Pendings on the files of the Hon'ble Court of Madras/Madurai Bench of the Hon'ble Court of Madras relating to recruitment to the post included in combined Civil Services Examaination -IV (Group-IV)"

(2) இவர்கள் தங்களது தகுதிகாண்பருவக் காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை)எண்.33,பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(எம்)துறை,நாள்.02.03.2017 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான கீழே குறிப்பிடப்பட்ட தேர்வுகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

| தாள் குறியீட்டு எண் | துறைத் தேர்வுகள் விபரம் |
|---|---|
| T.C-008 | Departmental Tests for the staff of Rural Development and Panchayat Raj Department-Tamil Nadu Panchayat Act,1994 & Rules and Constitution of India |
| T.C-166 | The Panchayat Development Account Test |
| T.C-010 | Departmental Test for the staff of Rural Development and Panchayat Raj Department - Scheme Administration |
| T.C-172 | The Tamil Nadu Government Office Manual Test |

(3) வரையறுக்கப்பட்ட மேற்படி, தேர்வுகளை ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறும் பட்சத்தில், இதே காரணத்திற்காக எவ்வித முன்னறிவிப்புமின்றி தனியர் பணியிலிருந்து நீக்கப்படுவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

(4) இவ்வாணையினை தனியர்களது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

26/12/23

**மாவட்ட ஆட்சியரின் நேர்முக**
**உதவியாளர்(வளர்ச்சி),**
**கரூர்.**

26/12/2023

**பெறுநர்,**

1) திரு.பா.செல்வம், காசாளர், ஊராட்சி ஒன்றியம்,கடவூர்
2) திரு.த.குணசேகரன்,இளநிலை உதவியாளர்,மாவட்ட ஆட்சியரக(வளர்ச்சி)பிரிவு அலுவலகம், கரூர்.
---(உரிய வழியாக)

**நகல்:-** வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ),ஊராட்சி ஒன்றியம்,கடவூர்.

**நகல்:-** பவ4 மற்றும் பவ9 முக்கிய ஆணைதொகுப்பிற்கு.